

திருவள்ளூர் மத்திய மாவட்டம் திருவள்ளூர் மேற்கு ஒன்றிய கழக செயலாளர் ஆர்.ஜெயசீலன் இல்ல திருமண வரவேற்பு விழா மாவட்ட கழக செயலாளர் அமைச்சர் ஆவடி சாமு.நாசர் தலைமையில் நடைபெற்றது. இதில் கழக துணை பொது செயலாளர் ஆ.இராசா எம்.பி கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினார். அருகில் சட்டமன்ற உறுப்பினர்கள் ஆ.கிருஷ்ணசாமி, திருத்தணி எஸ்.சந்திரன், வி.ஜி.ராஜேந்திரன், மாநில மாவட்ட கழக நிர்வாகிகள் மாநகர ஒன்றிய நகர பேரூர் கழக செயலாளர்கள் கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்

வேலூர் மாநகராட்சியில் புதிய வகுப்பறை திறப்பு!

வேலூர், ஜூன் 12 -

வேலூர் மாநகரம் மக்கான் அம்பேத்கர் நகர் மாநகராட்சி நடுநிலைப்பள்ளியில் புதிதாக கட்டப்பட்ட வகுப்பறையை மாநகர செயலாளர் ப.கார்த்தி கேயன் எம்.எல்.ஏ. திறந்து வைத்தார்.

இதில் வேலூர் மாநகராட்சி மேயர் சுஜாதா ஆனந்தகுமார், மாமன்ற உறுப்பினர் காஞ்சனா கிருஷ்ணமூர்த்தி, பகுதி செயலாளர்கள் ஜி.பாலமுரளி கிருஷ்ணா, பி.முருகப்பெரு மாள், மாநகர சிறுபான்மை நல உரிமை பிரிவு அமைப்பாளர் காலப்பாஎன்ற அப்துல் மஜீத், கிருஷ்ணமூர்த்தி, துரையரசன் மற்றும் கழக நிர்வாகிகள், பள்ளி தலைமை ஆசிரியர், ஆசிரியைகள் கலந்து கொண்டனர்.

தாம்பரம் தொகுதிக்கு உட்பட்ட புனித தோமையார் மலை ஊராட்சி ஒன்றியம் திருவஞ்சேரி முதல்நிலை ஊராட்சியில் புதிய சமுதாய நலக்கூடம் கட்டுவதற்கு ஸ்ரீபெரும்புதூர் நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு மற்றும் தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து 1 கோடி ரூபாய் நிதியின் ஒதுக்கீடு செய்து சமுதாய நலக்கூடும் கட்டுவதற்கு கட்டுமான பணிக்கு தாம்பரம் மாநகர கழக செயலாளர் எஸ். ஆர்.ராஜா எம்.எல்.ஏ அடிக்கல் நாட்டி துவக்கி வைத்தார். ஊராட்சி மன்ற தலைவர். ஜனனி சுரேஷ்பாபு. ருக்குமணி சக்தி. சக்தி.ஜே.பி. சுரேஷ்பாபு, நாகலிங்கம், இமானுவேல் சூர்யா, பொன் வோல், செல்வி பாபுஜி, மகளிர் அணி,அரசு அதிகாரிகள், நல சங்கம் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

முதலமைச்சர் பிறந்த நாளை முன்னிட்டு

“அன்னம் தரும் அமுதகரம்” 112 வது நாள்!

கொளத்தூர் மேற்குப் பகுதியில் – அமைச்சர் பி.கே.சேகர்பாபு உணவு வழங்கினார்!

சென்னை, ஜூன் 12 -

சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், கழக தலைவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு, வெவ்வேறு இடங்களில் அன்னம் தரும் அமுதகரங்கள் சிறப்புமிகு திட்டத்தின் 112வது நாளாக திரு. வி.க.நகர் வடக்கு பகுதி இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு. பி.கே.சேகர்பாபு உணவு வழங்கினார்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு காலை உணவு வழங்கும் சிறப்புமிகு “அன்னம் தரும் அமுதக்கரங்கள்” மாபெரும் திட்டத்தின் 112 ஆம் நாளான கழகத்தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இனிய பிறந்த நாளை முன்னிட்டு நேற்று (11.6.2026) திரு.வி.க நகர் வடக்கு பகுதி: 1) வட்டம் 72 அ வ.ஊ.சி நகர் முதல் தெரு அம்பேத்கர் மன்றம் அருகில், சென்னை. 2) வட்டம் 72 தாஸ் நகர் பிரதான சாலை கன்னிகாபுரம், சென்னை ஆகிய பகுதிகளில் மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் “தமிழ்நாட்டு நலன்களையும், எதிர்காலத்தையும் யாருக்காவும், எதற்காகவும் விட்டுத்தர மாட்டோம். தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக ஒன்றுபட்டு போராடுவோம். தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் - இதுதான் ஒரே இலக்கு!” என்ற உறுதிமொழியை ஏற்று பொதுமக்களுக்கு காலை உணவு வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சியில் மேயர் பிரியாராஜன், ப.தாயகம்கவி எம்.எல்.ஏ, செ.தமிழ்வேந்தன். புனிதவதி எத்திராஜன், எம்.சரவணன், பி.உதயசங்கர், இரா. வீரமணி, நா.துலுக்கா ணம், எம்.பெரோஸ்கான், கா.ராஜ் முகமது, வட்ட கழக செயலாளர்கள்: பரிமளா சுரேஷ்பாபு, மா.ருத்ரமூர்த்தி, எம்.ஏ.டீக்கா, எம்.இசட்.அபோய், எஸ்.புஷ்பராஜ், ஜி. கிருஷ்ணகுமார், எம்.தமிம், பொல்லு டி.சுரேஷ் குமார், வி.க.வெங்கடேசன், எஸ்.சசிகுமார், பா.பி.தாஸ், எஸ்.வெங்கடேசன். இத்திட்ட ஒருங்கிணைப்பாளர்கள்: சொ.வேலு, எஸ்.முரளி, பெரம்பூர் ராஜன், கே.ஆர்.அபரஞ்சி, அசோக் ஜெயின், பி.விஜயகுமார், ம.அசோக்குமார், எல். சம்பத்குமார், க.பா. பிரதீப்குமார் மற்றும் கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலை! வழக்கறிஞர் ஜி.கிருஷ்ணகுமார்- தலைமையில்

திரு.வி.க.நகர் வடக்குப் பகுதியில் ‘செம்மொழி நாள்’ புகழரங்கம்!

அமைச்சர் பி.மூர்த்தி – நடிகர் கருணாஸ், மதுக்கூர் ராமலிங்கம் – எழிலரசி சிறப்புரை!

சென்னை, ஜூன் 12 -

சென்னை கிழக்கு மாவட்ட திமுக வி.க.நகர் வடக்கு பகுதி சார்பில் ஜூன் 3 முத்தமிழ் றிஞ்ரின் 102 வது பிறந்த நாள் செம்மொழி நாளை முன்னிட்டு “செம்மொழி 7” பேரறிஞரின் இதயமானவர்! பேரொளியாய் உதயமானவர்! எனும் தலைப்பில் மாபெரும் புகழரங்கம் நாளை (13-06-25 வெள்ளிக்கிழமை) மாலை 6.00 மணியளவில், சென்னை, மங்களபுரம், சந்திரயோகி சமாதி சாலையில் நடைபெறுகிறது.

74வது வட்டக் கழகச் செயலாளர் வழக்கறிஞர் G.கிருஷ்ணகுமார் தலைமை வகிக்கிறார். மாவட்டச் செயலா ளரும், அமைச்சருமான பி.கே. சேகர்பாபு, முன்னிலை வகிக்கின்றார். செ.தமிழ்வேந்தன், எம். சாமிகண்ணு, பி.உதயசங்கர், பெரம்பூர்.ஆர்.ராஜன், கினார் ஆறுமுகம், வ.நாமதேவன், ஆர்.ராஜராஜன் வரவேற்கின்றனர்.

இம்மாபெரும் புகழர ங்கத்தில் வணிகவரி (ம) பதிவுத் துறை அமைச்சர் பி.மூர்த்தி, திரைப்பட நடிகர் கருணாஸ், பேச்சாளர் மதுக்கூர் ராமலிங்கம், பேச்சாளர் முனைவர் திருமதி.எழிலரசி ஆகியோர் புகழுரையாற்றுகின்றனர்.

மேலும், இப்புகழரங்கத்தில் பெருநகர சென்னை மேயர் பிரியா ராஜன், டாக்டர்.கலாநிதி வீராசாமி எம்.பி, ப.தாயகம்கவி எம்.எல்.ஏ, சரிதா மகேஷ்குமார், என். கிருஷ்ணமூர்த்தி, மாநில நிர்வாகிகள்: சங்கரிநாராயணன் தமிழன்பிரசன்னா பி.கே.மூர்த்தி கே.சந்துரு சி.மகேஷ்குமார் எஸ்.மணிமுடி பரிதிஇளம்சுருதி எம்.விஜயகுமார் என்.பி.எம். ஷேக்அப்துல்லா வே.உமாகாந்த் கோ.ஏகப்பன் தேவஜவகர் புனிதவதி எத்திராசன், இசட். ஆசாத், ஜி.எம்.தேவன். புலவர் சாமிநாகப்பன் பகுதி கழக செயலாளர்கள்: ஐ.சி.எப்.வ.முரளி தரன் ஏ.நாக ராசன் MC கூ.பி. ஜெயின் MC வே.வாசு எஸ்.ராஜசேகர் எஸ்.முரளி டி.எஸ்.பி. ராஜகோபால்MC எம்.டி.ஆர். நாகராஜ் சொ.வேலு MC வி.சுதாகர் ஸ்ரீராமுலு எம்.சி. பொதுக் குழு உறுப்பினர்கள்: பி.ஜே.துள சிங்கம் டி.வி.செம்மொழி, சாவித்திரிவீரராகவன், ரமேஷ் (எ) நீலகண்டன் எஸ்.பன்னீர் செல்வம், கோ.மணி எம்.இப்ராஹிம்கனி ஆ.நிர்மலாதேவி ஏ.பி.பூர்ணிமா இரா.கலைச்செல்வி. மாவட்ட இளைதூணி அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பமார்கள்: வானவில்வி ஜய் ஜெ.பாலமுரு கன், பா. ஜெகதீஷ் எஸ்.தனசேகர், G.J.பிரபு க.வினோத்குமார் R.D.சங்கர்நானா, இரா.வீரமணி ந.துலுக்கானம் எம்.பெரோஸ் கான் ஜி.தாமோதர ன், LPF மோகன், பி.விஜயகுமார் எம். விநாயகம் சுதாதீன தயாளன் ராஜேஸ்வரிஸ்ரீதர் துரைகண்ணன் ஜி.சாந்தகுமாரி ஜி.வி.நாகவள்ளி க.பா.பிரதீப்குமார் ட.சம்பத்குமார், ம.அசோ க்குமார் கா.ராஜ்முகமது து.ஆயிரம் கே.சிவக்குமார், கு.கிருஷ்ணமூர்த்தி. மாமன்ற உறுப்பினர்கள்: வழக்கறிஞர் மு.சரவணன், ரமணி லோகேஷ், தமிழ்செல்வி, சசிகுமார். வி.க நகர் வடக்கு தெற்கு பகுதி கழக நிர்வாகிகள் தில்லைகதிரவன், புல்லட் கி. ரமேஷ், பி.புவனவதி, ஆ. கோவிந்தன் பி.சுகுமார் த.கருணாநிதி வனஜா சண்முகம் அ. கருணாநிதி, வி.க நகர் வடக்கு தெற்கு பகுதி வடகழக செயலாளர்கள்: மா.ருத்ர மூர்த்தி பரிமளாசுரேஷ்பாபு டீக்கா அபோய் S.சசிகுமார் M.தமீம் பொல்லு D.சுரேஷ்குமார் வெங்கடேசன் S.வெங்கடேசன், பா.பி.தாஸ் மாவட்ட பிரதி நிதிகள்: பி.சதீஸ் பி.இளஞ்செழியன் டி.ராஜு வி.ஜெகன் எம்.துரைசாமி ஜெ.அண்ணாதுரை கே.என்.ஸ்வீட்பாபு R.பிரகாஷ் டி.சீனிவாசன் க.எழிலன் இரா.புருஷோத்தமன் நா. ராஜேந்திரன் எஸ்.பாபு வே. து.தாமரைச்செல்வன் எல்.சுப்பிரமணி பா.பாபுமனோ கரன் அ.கதிரவன் செக்மா.முத்தையா கி.நாகலிங்கம் எச்.திவாகர் அ.விஜயகுமார் மாவட்ட அணிகளின் இணை மற்றும் துணை அமைப்பாளர்கள்: எல்.பாண்டுரங்கன் இ.ஜோஸ்வா ஜெ.சத்தியமோகன் எம்.ஜி.குமாரசாமி அந்தோணிஜான் இ.என். கே.வீரமணி இ.வி நாயகம் ஜெ.வசந்த்கோகுல் எம்.கமலநாதன் ஏ.சந்தானராஜ் ஜீ.பிரீத்தி வி.பிரகாஷ் எஸ்.கே.சிவகுமார் பா.ஜலபூஷனம் வி.வில்பிரட்ஜான் கனல்கங்கா சி.தங்கராஜ் ஆர்.நிலவழகன் அ.சாக்ரடீஸ் எஸ்.சதீஷ் எம்.ஜான்ரூவில் ஏ.ஜி.எஸ்.கோல்டுஜி, எஸ். கணேஷ் எஸ்.காதர்மீரான் கே. லட்சுமி இரா.தனசேகர் டர்ர மேஷ் வி.செந்தில்குமார் ஜி.ராஜ்குமார் எச்.ஜியாவுதீன் கே.ராமமூர்த்தி எஸ்.ஜெயகுமார் அரிபிரசாத் எஸ்.சண்முகவேல் கேபிள் சுரேஷ் ஜி.சூர்யகுமார் கோ.கருணாகரன், புல்லட் என்.பாஸ்கர் அ.சாவித்திரி ஆர்.கிருஷ்ணவேணி, ஜெ.மணிகண்டன் பி.ஸ்ரீதர் ராஜன் எஸ்.விஜய்மகேந்திரன் ஆர்.மனோஜ்குமார் பிரியா மகேஷ்வரி ஜெ.எம். நிறைமொழி B.ஜெகதீஷ் எஸ். ஷகீலா எம்.சக்திவேல் டாக்டர் இ.பிரியதர்ஷினி ஈஸ்வரிகண்ணன் சாந்திமாசிலாமணி எஸ். கௌதம் செ.ராஜ்குமார் சிறப்பிக்கி ன்றனர். எஸ்.புஷ்பராஜ் நன்றி கூறுகிறார்.

நீலகிரி மாவட்டத்தில் பெய்த பெரும் மழை - இயற்கைச் சீற்றம்! இரவு பகல் பாராமல்

மிகவும் சிறப்பாகப் பணியாற்றிய மாவட்ட நிர்வாகத்திற்கு பாராட்டு!

சட்டப்பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் தலைவர் இலட்சுமணன் தெரிவித்தார்.

சென்னை, ஜூன் 12 -

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் (20242026) தலைவர் இலட்சுமணன் , நீலகிரி மாவட்டத்தில், கடந்த மாதத்தில் பெய்த பெரும் மழை மற்றும் இயற்கை சீற்றத்தி லிருந்து பொதுமக்களுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாத வகையில் இரவு பகல் பாராமல் மிகவும் சிறப்பாக பணியாற்றியமைக்காக மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் மாவட்ட நிர்வாகத்திற்கு பாராட்டுக்களை தெரிவித்தார்.

நீலகிரி மாவட்டம், உதகை தமிழகம் அரசு விருந்தினர் மாளிகையில், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை, பேரவையின் முன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் (2024-2026) ஆய்வுக் கூட்டம், தலைவர் லட்சுமணன் மற்றும் குழுவின் உறுப்பினர்கள் தேவராஜ், பாண்டியன், வில்வநாதன் ஆகியோர் தலைமையிலும், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. லட்சுமி பவ்யா தண்ணீரு முன்னிலையிலும் நேற்று (11-06-2025) நடைபெற்றது.

இக்கூட்டத்தில், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் தலைவர் தெரிவித்தாவது :

நீலகிரி மாவட்டத்தில் சமீபத்தில் ஏற்பட்ட மழை மற்றும் இயற்கை சீற்றத்தினால் மக்களுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாத வகையில் சிறப்பான முறையில் பணியாற்றிய மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களுக்கும், மாவட்ட நிர்வாகத்திற்கும் எனது சார்பாகவும், குழுவின் சார்பாகவும் பாராட்டுக்களை தெரிவித்துக் கொள்கிறேன். இன்றைய ஆய்வுக்கூட்டத்தில், தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம், தமிழ்நாடு மின்சார வாரியம், தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம் ஆகியவை குறித்து குழு விவாதிக்கப்பட வுள்ளது. ஆகவே சம்மந்தப்பட்ட அலுவலர்கள் குழுவிற்கு முன்பாக சரியான தகவல்களை தெரிவிக்கும்படி கேட்டுக் கொள்கிறேன் என தெரிவித்தார்.

அதனை தொடர்ந்து குழுவின் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறையின் கீழ் செயல்பட்டு வரும் புதுமைப்பெண் திட்டம், தமிழ் புதல்வன் ஆகிய திட்டங்கள் குறித்தும், கலைஞர் மகளிர் உரிமைத்தொகை திட்டத்தின் செயல்பாடுகள் குறித்தும் சம்மந்தப்பட்ட துறை அலுவலர்களிடம் கேட்டறிந்தார்கள்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் நாராயணன், உதகை வருவாய் கோட்டாட்சியர் சதீஷ்குமார், ஆவின் பொது மேலாளர் மரு.ஜெயராமன், மாவட்ட சமூக நல அலுவலர் திருமதி.பிரவீணா தேவி, ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்ட அலுவலர் திருமதி பிரம்மவித்யா நாயகி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) (பொ) திருமதி.வாணி, உதவி இயக்குநர் (கிராம ஊராட்சி) சரவணன், சட்டமன்ற பேரவை குழுவின் இணைச் செயலாளர்கள் பூபாலன், திருமதி.சாந்தா, சிறப்பு அலுவலர் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் முனை வர் ஸ்ரீராம், தலைமை நிதிக்கட்டுப்பாட்டு அலுவலர் தமிழ்நாடு மின் பகிர்மான கழகம் சென்னை திருமதி.வெ. சவிதா, நிதி கட்டுப்பாட்டு அலுவலர் நா.பிரபாகரன், மேற்பார்வை பொறியாளர் நீலகிரி மின் பகிர்மான வட்டம் பொறிஞர் க.சேகர், துணை நிதி கட்டுப்பாட்டு அலுவலர் ம் சுரேஷ், கணக்கு மேற்பார்வையாளர் நீலகிரி மின் பகிர்மான வட்டம் கு.த.பெலிக்ஸ் பிரபாகரன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

தமிழ்நாட்டில் நோய் எதிர்ப்பு சக்தி 97 விழுக்ககாடு ஆக உயர்ந்துள்ளது

“சிக்கலுள்ள கர்ப்பங்களுக்கான சிகிச்சை வழிகாட்டுதல்கள் பயிற்சி கருத்தரங்கம் !

அமைச்சர் மா.சுப்பிரமணியன் தொடங்கி வைத்தார்!

சென்னை, ஜூன் 12 -

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (11.06.2025) சென்னை, தேனாம்பேட்டை, டிஎம்எஸ் வளாகத்தில் உள்ள பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துத்துறை இயக்குநகரத்தில், “சிக்கலுள்ள கர்ப்பங்களுக்கான சிகிச்சை வழிகாட்டுதல்கள் பயிற்சி கருத்தரங்கத்தினை” தொடங்கி வைத்து பேசினார். பிறகு அமைச்சர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

மக்கள் நல்வாழ்வுத்துறையின் சார்பில் தினந்தோறும் பல்வேறு சிறப்புக்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. தமிழ்நாட்டில் மகப்பேறு மரண விகிதத்தை குறைப்பதற்கும், குழந்தைகளுக்கான மரண விகிதத்தை குறைப்பதற்கும் தொடர்ச்சியாக பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. மகப்பேறு காலங்களில் தாய்மார்களின் மரணம் என்பது 202122 இல் 1 இலட்சம் பிறப்புகளுக்கு 90.5 ஆக இருந்தது, 2022 23 இல் 52 ஆக குறைந்தது, 2023 24 இல் 45.5 ஆகவும், கடந்த ஆண்டு 39.4 ஆக குறைந்திருக்கிறது. இது வெகுவாக குறைந்திருந்தாலும் இன்னமும் குறைந்து மகப்பேறு காலங்களில் தாய்மார்களுக்கான மரண விகிதத்தை பூஜ்ஜிய நிலைக்கு கொண்டு செல்வதற்கு பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது.

2023- 24 இல் விருதுநகர் மாவட்டத்தில் ஒரு மகப்பேறு இறப்பு கூட இல்லாத நிலை உள்ளது. இன்று நடைபெறும் இக்கூட்டத்தில் 6 மாவட்டங்கள் குறைந்த அளவில் இறப்பு விகிதம் பதிவாகி இருக்கும் மாவட்டங்களான பரமக்குடி, நாகப்பட்டினம், நீலகிரி, விழுப்புரம், மதுரை, சென்னை ஆகிய 6 மாவட்டங்கள் குறைந்த அளவிலான மகப்பேறு இறப்பு விகிதத்தை பதிவு செய்து இருக்கின்றன. எனவே அந்தந்த மாவட்ட சுகாதார அலுவலர்கள் மற்றும் மருத்துவ நிபுணர்களுக்கு வாழ்த்துக்கள் தரப்பட்டது. எதிர்காலத்தில் அனைத்து மாவட்டங்களிலும் இது போன்ற ஒரு நிலை ஏற்படுத்த வேண்டும். குழந்தைகளுக்கான மரண விகிதங்கள் என்று எடுத்துக் கொண்டாலும், 202122 இல் 1000 குழந்தை பிறப்புகளுக்கு இறப்பு என்பது 10.2 ஆக இருந்தது. 202324 இல் 8.2 ஆக குறைந்தது, கடந்த ஆண்டு 7.7 ஆக குறைந்திருக்கிறது. இந்த விகிதத்தையும் குறைப்பதற்கு நடவடிக்கைகள் தொடர்ச்சியாக எடுக்கப்பட்டு வருகிறது.

மகிழ்ச்சியான மகப்பேறு!மகத்தான மருத்துவம்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலோடு, ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் துணை சுகாதார நிலையங்களில் கர்ப்பிணித் தாய்மார்களுக்கு பிரசவ காலங்களுக்கு முன்னாள் யோகா பயிற்சி, மூச்சுப் பயிற்சி போன்ற அவர்களுக்கு சுகப் பிரசவங்களுக்கு வழி வகுக்கின்ற பயிற்சிகளை பயிற்றுநர்கள் மூலம் தருவது என்று முடிவெடுத்து அந்தவகையில் அனைத்து மருத்துவமனைகளிலும் பயிற்சிகள் வழங்கப்பட்டது. தற்போது 4000 மருத்துவக் கட்டமைப்புகளில் பயிற்றுநர்களின் மூலமும், பயிற்றுநர்கள் வாயிலாக பயின்றவர்கள் மூலமும், இந்தப் பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகிறது. தமிழ்நாட்டைப் பொறுத்த வரை 8713 துணை சுகாதார நிலையங்க ளும், 2286 ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்களும் இருக்கின்றது. எனவே இம்மருத்துவமனைகளில் வரும் அனைத்து கர்ப்பிணித் தாய்மார்களுக்கும் சுகப்பிரசவம் ஏற்படும் வகையில் முறையான பயிற்சிகள் வழங்கப்பட ஏதுவாக இக்கருத்தரங்களில் அத்தகைய கருத்துருவும் பேசப்பட்டிருக்கிறது. எதிர்காலத்தில் முழுமையாக குறைந்து இந்தியாவிற்கு மட்டுமல்ல உலக அளவில் வழிகாட்டும் மாநிலமாக தமிழ்நாடு மகப்பேறு தாய்மார்களின் மரண விகிதத்திலும், குழந்தைகள் பிறப்பில் ஏற்படும் மரண விகிதத்திலும் படிப்படியாக குறையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

கோவிட் பொறுத்த வரை கடந்த ஒரு மாதமாக பரபரப்பாக பேசப்பட்டு வரும் செய்தியாக இருக்கின்றது. தமிழ்நாட்டில் இருந்து 19 மாதிரிகள் புனேவில் உள்ள வைராலஜி ஆய்வகத்திற்கு அனுப்பி பரிசோதனை செய்யப்பட்டத்தில் ஒமைக்ரானின் ஒரு வகை என்று கண்டறியப்பட்டது. அந்த வகை கொரனோ வீரியமற்றது. பெரிய அளவில் உயிர் பாதிப்பு ஏற்படுத்தக்கூடியது அல்ல என்று அறிவியல் ரீதியாக தெரிய வந்திருக்கிறது. கோவிட் குறித்து யாரும் பதட்டப்பட வேண்டாம். அதேநேரத்தில் வயது முதிர்ந்தவர்கள், நோய் எதிர்ப்பு சக்தி குறைந்தவர்கள், கர்ப்பிணித் தாய்மார்கள், இணை நோய் பாதிப்பு உள்ளவர்கள், பொது இடங்களில் கூடும் போது முகக் கவசம் அணிந்து கொள்வது அவசியம் என்று அறிவுறுத்தப்பட்டிருக்கிறது.

தமிழ்நாட்டைப் பொறுத்த வரை மிகப் பெரிய அளவிலான நோய் பாதிப்புகள் ஏற்படும் போது தனியார் மருத்துவமனைகளில் பரிசோதனைகள் மேற்கொள்கிறார்கள். அத்தகைய பரிசோதனைகளில் கோவிட் பரிசோதனையும் மேற்கொள்ளப்படுகிறது. அப்பரிசோதனைகளில் ஏற்கெனவே சொல்லப்பட்ட இணை நோய் பாதிப்பு உள்ளவர்கள், கர்ப்பிணித் தாய்மார்கள், வயது முதிர்ந்தவர்கள், நோய் எதிர்ப்பு சக்தி குறைந்தவர்கள் என்று கோவிட் தொற்று இருப்பது கண்டறியப்படுகிறது. கோவிட் பாதிப்பு உள்ளவர்கள் இருமல், சளி மற்றும் காய்ச்சல் போன்ற பாதிப்புகள் ஏற்பட்டு 3 நாட்களில் இயல்பு நிலைக்கு திரும்பி விடுகிறார்கள். அதனை தொடர்ந்து மாவட்ட சுகாதார குழுவினர் கண்காணித்து வருகிறார்கள்.

தமிழ்நாட்டில் இன்னொரு கூடுதல் மகிழ்ச்சியான செய்தி. 2020 இல் கோவிட் பெருந்தொற்று உச்சத்தில் இருந்த போது, நோய் எதிர்ப்பு சக்தி மக்களிடத்தில் எந்த அளவிற்கான சதவிகிதத்தில் இருக்கிறது என்று ஒரு கணக்கெடுப்பு நடத்தப்பட்டது. அந்தவகையில் 32% நோய் எதிர்ப்பு சக்தி மக்களிடத்தில் காணப்பட்டது. அதன்தொடர்ச்சியாக 2021இல் கணக்கெடுப்பு நடத்தப்பட்டபோது நோய் எதிர்ப்பு சக்தி என்பது 29% அளவிற்கு மட்டுமே இருந்தது. பிறகு கோவிட் பாதிப்பு, தடுப்பூசிகள் வழங்கப்பட்டது,பல்வேறு உணவு கட்டுப்பாடுகள், உடற்பயிற்சி போன்ற காரணங்களில் 70% அளவிற்கு நோய் எதிர்ப்பு சக்திகள் இருந்தது. 4 கட்டங்களாக மேற்கொள்ளப்பட்டு 2021 இறுதியில் 87% மக்களுக்கு அதாவது கோவிட் பெருந்தொற்று காலங்களில் நோய் எதிர்ப்பு சக்தி பெற்றிருக்கிறார்கள் என்கின்ற உண்மைகள் கண்டறியப்பட்டிருக்கிறது. இந்நிலையில் வயது மூத்தவர்களுக்கு என்று பல்வேறு வகைகளில் அவர்களுக்கு இருக்கின்ற நோய் பாதிப்புகள், நோய் பாதிப்புகளுக்கான தீவிரத்தன்மை எந்த அளவிற்கு இருக்கிறது என்பதை கண்டறிவதற்கு பல்வேறு பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டது. அப்படி 1214 வயது மூத்தவர்களிடமிருந்து மாதிரிகள் எடுத்து பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.இதில் ஒரு கட்டமாக நோய் எதிர்ப்பு சக்தி என்பது 97% அவர்களுக்கு இருப்பதாக கண்டறியப்பட்டுள்ளது. எனவே நோய் எதிர்ப்பு சக்தி அதிகரித்து இருக்கும் நிலையில் இதுமாதிரியான வீரியமற்ற கோவிட் வைரஸ் பாதிப்பு என்பது பெரிய அளவில் இருக்காது. என்றாலும்கூட கோவிட் பாதிப்பு இருக்காது என்று சொல்லவில்லை. ஏற்கெனவே சொல்லப்பட்ட இணை நோய் உள்ளவர்கள், கர்ப்பிணித் தாய்மார்கள், வயது மூத்தவர்கள் பொது இடங்களுக்கு செல்லும் போது எச்சரிக்கையாக இருப்பது நல்லது .

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அரசு முதன்மைச் செயலாளர் முனைவர் ப.செந்தில்குமார், இ.ஆ.ப., தேசிய நலவாழ்வு குழும இயக்குநர் மரு.அருண் தம்புராஜ், இ.ஆ.ப., பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துத்துறை இயக்குநர் மரு. செல்வவிநாயகம், உலக சுகாதார நிறுவனம் மகப்பேறு மருத்துவ அலுவலர் மரு. பிரியங்கா சிங், கூடுதல் இயக்குநர் மரு. சோமசுந்தரம், இணை இயக்குநர்கள் மரு.நிர்மல்சன் மற்றும் பொது சுகாதாரத்துறை கூடுதல் இயக்குநர்கள், இணை இயக்குநர்கள், மாவட்ட சுகாதார அலுவலர்கள், மருத்துவ அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

இராயபுரம் கிழக்கு பகுதி 49 வதுவட்ட திமுக சார்பில் வட்ட கழக பொறுப்பாளர் க.கலைசெல்வன் ஏற்பாட்டில் தலைமை பொது குழு உறுப்பினர் வே. சிவகுமார் தலைமையில் முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்த நாளை முன்னிட்டு புதிய கொடி கம்பம் அமைத்து கழக கொடியேற்றி பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவி வழங்கி சிறப்பாக கொண்டாடப்பட்டது இந்நிகழ்ச்சிக்கு பகுதி செயலாளர் இரா.செந்தில்குமார் .முன்னிலை வகித்தார் . வட்ட நிர்வாகிகள் எம்.பழனி எம்.வி. நரசுமணி அ. குமார்.ஜி. கோதண்டன் த.கு.பன்னிர் ஏ.கதிரவன் பா. சுதாகர் கே.பாஸ்கர் ஆகியோர் அனைவரையும்.வரவேற்றனர் ராயபுரம் சட்டமன்ற உறுப்பினரும் தலைமை செயற்குழு உறுப்பினர் ஐட்ரீம் இரா.மூர்த்தி கழக கொடியேற்றி தலைவர் கலைஞர் அவர்களின் படத்திற்கு மலர்அஞ்சலி செலுத்தி பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகள் மற்றும் இனிப்புகள் வழங்கினார். எல். சீனிவாசன், கி.இராஜேந்திரன் ஆகியோர் நன்றி கூறினர். இதில் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

இந்தோனேசியாவில் அயலக அணி சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102 வது பிறந்த நாள் விழா சிறப்பாக நடைப்பெற்றது. இதில் இந்தோனேசியாவை ஆதரவற்ற சிறுவர்கள் 50 பேருக்கு நல உதவி செய்யப்பட்டது. இதில் கழக கொள்கைபரப்பு இணைசெயலாளர் நெல்லிக்குப்பம் புகழேந்தி கலந்துக்கொண்டு சிறப்புரை ஆற்றினார். முன்னதாக தலைவர் கலைஞர் அவர்களின் உருவபடத்திற்கு மரியாதை செய்யப்பட்டது. விழாவிற்கான ஏற்பாட்டை வி.பி திராவிடமணி சிறப்பாக அமைத்திருந்தார் . இதில் சிங்கப்பூர் அயலக அணி சார்பில் பி.சந்திரசேகரன், செந்தில்குமார் மற்றும் இந்தோனேசியாவை சார்ந்த கலையரசன், முத்துசெல்வம், பாலமுருகன் , பாண்டியன், டர்வீன், சிவசக்தி மற்றும் கழக உடன்பிறப்புகள் திரளாக கலந்துக்கொண்டனர்.